பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ. வெ .எண். 77 நாள்.08.07.2017

**வாக்காள பட்டியல் திருத்தம் பணி சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது மாவட்ட தேர்தல் அலுவலர் /பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி 01.01.2017 –ம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலில் விடுப்பட்ட வாக்காளர்கள், இளம் வாக்காளர்கள் மற்றும் தகுதி வாய்ந்த மாற்று திறனாளிகளை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் தொடர்பான சிறப்பு பணிகள் 01.07.2017 முதல் 31.07.2017 வரை நடைபெறவுள்ளது. தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி வருகிற 09.07.2017 (ஞாயிறு கிழமை) மற்றும் 23.07.2017 (ஞாயிறு கிழமை) ஆகிய இரு நாட்களில் அனைத்து வாக்கு சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

எனவே, 18 முதல் 21 வயது சேர்ந்த இளம் வாக்காளர்கள், மாற்று திறனாளிகள் மேற்கண்ட சிறப்பு முகாம் நாட்களில் பங்கு கொண்டு இந்த வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப.,அவர்கள்.,தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி